# செய்திமடல்

## காரைநகர் அபிவிருத்திச் சபை

மடல் 01 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 2015 | இதழ் 01



காரைநகர் மக்களுக்கு கலங்கரை விளக்காக மாணவர் நூலகம்



புனரமைக்க முன் ஆலடிக் கேணி




நிர்வாக சபை 2013/2014





### உள்ளே...

* மாணவர் நூலகம் முதலாம் மாடி கட்டடப்பணிகள் பூர்த்தி
* ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஒரு கோடி
* நவீன முறையில் வைத்தியசாலை விடுதிகள் புனரமைப்பு
* வாழ்வாதார உதவிகள்
* பிரதேச செயலக நிதியுதவியுடன்...
* காரைநகர் அபிவிருத்தியில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு
* காரைநகரில் நீர்வளப் பாதுகாப்பு
* நவீன விளையாட்டு மைதானம்



புனரமைக்கப்பட்டபின் ஆலடிக் கேணி





**News Only But Not Views**

செய்திமடல்
காரைநகர் அபிவிருத்திச் சபை
மடல் 01 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 2015 இதழ் 01

## ஊர் கூடித் தேர் இழுப்போம்

இலங்கைத் திருநாட்டில் தமிழர் பூர்வீக நிலங்க ளில் அபிவிருத்தி கடந்த முப்பதாண்டு கொடிய யுத்தத்தின் விளைவால் எத்தனையோ சகாப்பதங்க ளுக்குப் பின்நோக்கித் தள்ளப்பட்ட நிலையில் எமது தாய் மண்ணாம் காரைநகரும் இதற்கு விதிவில க்கல்ல. ஆனால் ஏனைய ஊர்களை விடவும் எமது ஊர் இடப்பெயர்வினால் இன்றும் எத்தனையோ ஆண்டு கால அபிவிருத்தியில் பின்தள்ளப்பட்டமை யாவரும் அறிந்த ஒன்றே.

நன்னீர் வளமும், நல்ல விளை நிலங்களும், பனை வளமும், கடல் வளமும், செந்நெல்க் கனனிகளும் நிறைந்த எமது பூர்வீக மண் அறிஞர்களையும் ஆன்மீகவாதிகளையும், தனவந்தர்களான வணிகப் பெருமக்களையும் ஈன்று புறந்தந்த மண் 'காகம் பறக்காத இடமும் இல்லை காரைதீவான் போகாத இடமும் இல்லை' என்ற முதுமொழிக்கிணங்க நாட் டின் எந்த மூலைக்குச் சென்று வணிகத் தொழிலோ அரச உத்தியோகமோ செய்தாலும் ஊருக்கு வந்து வீடு கட்டி வயல் விதைத்து பொருள் பண்டம் சேர்த்து பிள்ளை குட்டிகளுடன் ஊர்ப் பெருமை பேசி வாழ்ந் தவர்கள் நம்மவர்கள். குடிக்கத் தண் ணீரும் உண்ண உணவும் ஊரிலேயே தன்னிறை வாகப் பெற்று அனுபவித்தவர்கள்.

கல்வி தர நல்ல கல்லூரிகள், அறிவாலயமாய் விளங் கும் ஆரம்பப்பள்ளிகள், இடை நிலைப் பாடசாலைகள், பிணி நீக்க நல்ல மருத்துவமனை, ஆன்மீகத்திற்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆலயங்கள், தபாலகம், பிரதேச செயலகம், பிரதேச சபை கூட்டுறவுச் சங் கம், இ.போ.ச. போக்குவரத்துச்சாலை என்று எல்லா வளங்களும் கொண்டமைந்த எங்கள் ஊர் மக்கள் இடப்பெயர்வால் நலிவுற்ற நிலை கண்டு, பிறந்த ஊர் மீண்டும் பெருமையுற வேண்டுமெனில் அதன் அபிவிருத்திக்கு ஒரு சபை வேண்டும் என எண் ணிய நல் உள்ளங்களால் உதயமானதே காரைநகர் அபிவிருத்திச் சபை ஆகும்.

2005 இல் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து ஒரு தசாப்தம் கடந்த நிலையில் இன்று வரை சபையின் உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டவர்களின் தியாகத்தால் எமது ஊர் இன்று எழுச்சி பெற்றுள் ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. காரை அபிவிருத்திச் சபையின் ஊடாக ஊரின் வளர்ச் சிக்கும், எழுச்சிக்கும் அரும்பாடுபட்ட அத்தனை உறுப்பினர்களும் வாரி வழங்கிய பெரு மக்களும், கோடி கோடியாய் நிதி வழங்கிய புலம் பெயர் உறவுகளும் என்றும் நன்றிக்கும் போற்றுதற்குமுரிய வர்களாவர்.

எந்த வேலைத் திட்டங்களிலும் பங்கெடுக்க முன்வ ராது, முன்னின்று செய்வோரையும் கேலியும் கிண்ட லுமாய் விமர்சனம் செய்யும் பண்புள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களும் ஒருவி தத்தில் நன்றிக்குரியவர்களே. இத்தகையோரின் விமர்சனங்களால் ஓடி ஒழிந்து விடாது முன்னின்று உழைத்தவர்கள் தொடர்ந்தும் களத்தில் நின்று உழைக்க வேண்டும். "காய்கிற மரத்துக்குத்தான் கல்லெறி விழும்" என்பார்கள். காரைநகர் அபிவி ருத்திச் சபையின் செயற்றிட்டங்களுக்குப் புலம் பெயர் உறவுகள் பெரும் நிதியும் ஆலோசனையும் வழங்கியிருந்தார்கள். அத்தனை புலம்பெயர் உறவு களையும் நன்றியோடு நினைவு கூரும் இவ்வேளை அரச நிதி பெற்றும் அபிவிருத்தி வேலைகளும் நடந்தேறியுள்ளன. இதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிவர்களும் நன்றிக்குரியவர்களே எதிர்கா லத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகவும் நிதியுதவி பெற்று அபிவிருத்தி வேலைகள் செய்வதற் கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானினும் நனி சிறந்தனவே**

என்பதற்கிணங்க

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைத்து நம்மவர்களும், ஊர் அபிவிருத்தியில் பங்கு தாரர் களாக மாறவேண்டும். தூர நின்று பொழுது போக் காக விமர்சனம் செய்வதை விடுத்து தாய் மண் மீது பற்று வைத்து பணியாற்ற அனைவரும் முன்வர வேண்டும். தாராள மனம் படைத்தவர்களால் பண வளம் வரும்போது அதனைச் சிறந்த முறையில் திட்டமிட்டு அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப் பதற்கு செயற்படுத்தக் கூடிய "மனித வளம்" இன் றித் தவிக்கிறது எமது ஊர்.

இங்கு உள்ள பிரதானமான பிரச்சினை குடிதண் ணீர். இதனை நிவர்த்தி செய்வதற்கு துறைசார் வல்லுநர்களின் ஆலோசனையுடன் (Master Plan) குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிறப்பாக செயற்ப டுத்த வேண்டும். குளங்கள், கிணறுகள், நீர்த்தேக் கங்கள், கால்வாய்கள் உரிய திட்ட மிடலுடன் புனர மைக்கப்பட வேண்டும். புத்தி ஜீவிகளை உருவாக்கும் கல்வித்துறையை ஊக்குவிப்பதற்கான தூரநோக்கு செயற்றிட்டங்கள் உருவாக்கி செயற்படுத்த வேண் டும். ஆன்மீகத்தை வளர்ப்பதற்காக ஆலயங்கள் கட்டும் பணியில் ஈடுபடும் ஆன்மீக வாதிகள் அறிவியலை வளர்ப்பதற்கும் தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும். ஆலயங்கள் அறப்பணி நிலையங்களாக, அநாதைப் பிள்ளைகளைத் தத் தெடுத்து அறிவூட்டும் காப்பகங்களாக மாற வேண் டும். உள்ளூர் வளங்களை மூலப்பொருளாக் கொண்டு கைத்தொழில் வாய்ப்புகள் பெருக வேண்டும். முன் னரைப் போல் எல்லா வயல் நிலங்களிலும் பெரும் போக நெல் விளைச்சலும் சிறுபோக சிறுதானிய விளைவும் பெருக வேண்டும்., சிறு வீதிகள் புனர மைத்து நெடுஞ்சாலைகள் அகலமாக்கப்பட வேண் டும். கலை வளர்க்கும் மன்றங்களும், தொழில் பயிற்சி வழங்கும் நிறுவனங்களும் மழலைக் கல்வி வழங்கும் சிறுவர் முன்பள்ளிகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அனைத்து துறைசார் நிபுணர்களும் ஒன்றிணைந்து 'ஐந்தாண்டுத் திட்டம்' ஒன்றை வகுத்து சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியான பாரிய மாற்றத் தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி இலங் கைத் திருநாட்டின் சிகரமென காரைநகர் திகழ மனம் வைத்து உழைக்க அனைத்து உள்ளங்களும் அணிதிரள வேண்டுகிறோம்.

**- ஆசிரியர்**

## தலைவரின் உள்ளத்திலிருந்து



காரைநகர் அபிவிருத்திச் சபை நிர் வாகக் குழுவின் (2013/14) பதவிக்கா லம் முடிவடைந்து பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஜூன் மாதம் 07ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

எமது பதவிக்கால முடிவில் காரைநகர் அபிவிருத் திச் சபையினால் 'செய்திமடல், காரைநகர் அபிவி ருத்திச் சபை' எனும்; இக்குறும்பத்திரிகையின்; முதல் இதழ் வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடை கின்றேன். புலம்பெயர் நாடுகளில் எமது ஊர் மக்களுக்காக இயங்கும் இணைதளங்கள் மூலம் ஊரிலும் வெளிநாடுகளிலும் வாழகின்;ற எமது மக் களைப்பற்றியும் மற்றும் எமது ஊர் பற்றிய பல நல்ல தகவல்களையும்; ஊரிலுள்ளவர்கள் அறிந்து கொள்ளும்; வாய்ப்புகள் உள்ளன. இது ஒரு போற் றப்பட வேண்டியதும் பாராட்டிற்குரியதுமான விடயம். இருந்தும் எமது மக்களில் எவ்வளவு பேர் கணனி கள் வைத்துள்ளார்கள் அல்லது அவற்றினைப் பாவிக்க அறிந்துள்ளார்கள் என்று பார்த்தால் அவர் களின் எண்ணிக்கை மிகவும் கணிசமாகவே உள் ளது என்று தான் கூறவேண்டும். அத்துடன் இணை தளங்களுக்குக் கிடைக்கப் பெறும் செய்திகளில் அதிகமானவை இங்கிருந்துதான் அனுப்பப்படுகின் றன. அச்செய்திகள் சில வேளைகளில் திரிபு படுத் தப்பட்டு வெளியாகின்றன. இச்செயற்பாடுகளினால் சம்பந்தப்பட்ட சிலரது மனம் புண்படுவதனை நான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ளேன்.

குறிப்பிட்டுள்ள குறைகளை நீக்குவதன் பொருட்டு இக்குறும்பத்திரிகையினை ஆறு மாத இடைவெ ளியிலாவது பதிப்பித்து வெளியிட்டால் நல்ல பய னைத்தரும் என்று எங்களில் சிலரின் ஆலேசனை யின் பிரகாரம் இக்குறும்பத்திரிகை வெளியிடப்ப டுகின்;றது. இதன் நோக்கம் முக்கியமாக எமது ஊர் செய்திகளை பாரபட்சமின்றி வெளியிடுவதுடன் எமது இளஞ்சமுதாயத்தினரையும் ஊக்குவிக்க ஒரு சந்தர்ப் பமாக அமையும். மேலும் நாமோ அல்லது வருங்கா லங்களில் இப்பணியினைத் தொடர விரும்புவோர் களோ சொந்தக் கருத்துக்களைத் திணிக்காமலும் உண்மை நடப்பவற்றை பிசகாமலும் அதாவது 'செய்தி மட்டும்; கருத்துக்கள் அல்ல' - (News only but not Views) என்ற சொற்களைத் தாரகமந்திரமாகப் பாவித்து நடப்போமேயானால் நிச்சயமாக இது காரைநகர் வாழ் மக்களுக்கான ஓர் ஊடகமாக மிளிர்ந்து பிர காசிக்கும்.

எனது வாழ்த்துச் செய்தியினை முதல் மொட்டு இதழில் தெரிவிக்கச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றி நவில்வதுடன் இம்முயற்சி வெற்றி பெற்று மொட்டு, மலராகி, காயாகிக் கனியவேண்டும் என் றும் எனது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

சிவா. தி. மகேசன்

தொடர்புகளுக்கு
காரைநகர் அபிவிருத்திச் சபை
புதுவீதி (சிவன்கோயில் வீதி),
காரைநகர்.
Karainagar Development Socity
New Road (Sivan Kovil Road),
Karainagar.
Tel : +94 (0)212211757
Email : kas2131@gmail.com

# காரைநகர் அபிவிருத்திச் சபையும் அதன் செயற்பாடுகளும்

காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக காலத்திற்குக் காலம் பல்வேறு பொது அமைப்புக்கள் தோற்றம் பெற்று காரைநகரின் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்து வந்தன. எனினும் 1991 இல் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வினால் அவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக இடை நிறுத்தப்பட்டன. 1996 இல் மக்கள் மீண்டும் குடியமர்ந்த பின் காரைநகரின் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கான அமைப்புக்களின் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே காணப்பட்டன.

காரை அபிவிருத்திச்சபை, தமிழ் வளர்ச்சிக்கழகம், கம்பன் கழகம், வாரிவளவு நல்லியக்க சபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் இடப்பெயர்வுக்கு முன்னிருந்த போதிலும் அவற்றின் செயற்பாடுகள் மக்கள் மீளக்குடியேறிய போதிலும் ஆரம்பிக்கப்படாத நிலை காணப்பட்டது. இதனால் புலம்பெயர் உறவுகளும் எமது ஊரில் வசிப்பவர்களும் காரைநகரின் அபிவிருத்தியில் பங்கெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் இன்றிக் காணப்பட்டனர்.

காரைநகரின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு காரைநகரிலிருந்து புலம் பெயர்ந்து எந்தெந்த நாட்டில் எமது ஊரவர்கள் வசிக்கின்றார்களோ அங்கெல்லாம் எம் மண்ணின் பெயரால் மன்றங்கள் அமைத்து நாம் வாழும் நாட்டினதும் எமது ஊரினதும் முன்னேற்றத்திற்கு வழிகள் அமைத்தனர். அந்த வகையில் லண்டனில் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம், கனடாவில் கனடா காரை கலாச்சார மன்றம், சுவிற்சலாந்தில் சுவிஸ் காரை அபிவிருத்திச்சங்கம், பிரான்ஸில் பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம், அவுஸ்திரேலியாவில் அவுஸ்திரேலியா காரை நலன்புரிச்சங்கம் என அமைப்புக்களை உருவாக்கி பணி செய்த போதிலும் காரைநகரில் அவ்வாறானதொரு அமைப்பு இல்லாதமையால் அவர்கள் தமது பணிகளை காரைநகரில் முன்னெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். இதனைக் கருத்திற் கொண்டு சுவிற்சலாந்துக் காரை உறவுகளின் முயற்சியால் 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி காரைநகர் அபிவிருத்திச்சபை தோற்றுவிக்கப்பட்டது.

அன்றைய தினம் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் நடராசா மண்டபத்தில் பாடசாலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமையில் காரைநகர் மக்கள் ஒன்றுகூடி காரைநகர் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ந்ததுடன் காரைநகர் அபிவிருத்திக்கான ஓர் அமைப்பினை உருவாக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர். அதன் அடிப்படையிலேயே காரைநகர் அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டது. இதன் முதற் தலைவராகக் காரைநகர் பிரதேச செயலகத்தில் அன்று நிதி உதவியாளராகக் கடமையாற்றிய திரு.வே.குமாரசாமி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் செயலாளராக அமரர் திரு.ஜெ.தில்லையம்பலவாணர் அவர்களும், பொருளாளராக ஆசிரியர் திரு.தெ.லிங்கேஸ்வரன் அவர்களும், உபதலைவராக அன்றைய யாழ்ரன் கல்லூரி அதிபர் திரு.ந.பரமசிவம் அவர்களும், உப செயலாளராக திரு.எஸ்.இராசநாயகம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். இந்த அபிவிருத்திச்சபை ஏனைய நாட்டுச் சங்கங்களுக்கெல்லாம் தாய்ச்சங்கமாக சிறப்புடன் காரைநகரின் அபிவிருத்திப் பணிகளில் தனது காத்திரமான பங்கினை வகித்தது.

சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் அதன் செயலாளராகப் பணியாற்றிய அமரர் திரு.ஜெ.தில்லையம்பலவாணர் அவர்கள் அமரத்துவம் அடையும்வரை (13.03.2008) சிறப்பான சேவைகளை ஆற்றினார். தொடர்ந்து சபையின் செயலாளர்களாக Dr.S.நடராசா, பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, திரு.S.இராசநாயகம் போன்றோர் பணியாற்றியதுடன் தலைவராகப் பணியாற்றிய திரு.வே.குமாரசாமி அவர்கள் பதவியை இராஜினாமா செய்ததும் உப தலைவராக இருந்த திரு.ந.பரமசிவம் அவர்கள் தலைவராகச் சில காலம் பதவி வகித்தார்.

எனினும் மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபையிடம் நிர்வாகம் கையளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் சபையின் தலைவராக திரு.க.சோமசேகரம் அவர்களும், செயலாளராக திரு.இ.ஜெயராசா அவர்களும், பொருளாளராக திரு.ப.சற்குணராசா அவர்களும், உப தலைவராக திரு.மு.லட்சுமணன் அவர்களும், உப செயலாளராக திரு.ந.பாலகிருஷ்ணன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நிர்வாக சபையினர் தமது இரண்டு வருட பதவிக் காலத்தில் புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புக்களையும் ஒன்றிணைத்து அவற்றின் மூலமாகக் காரைநகருக்கு சிறந்த சேவைகளை ஆற்றினர்.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் 06.01.2013 இல் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. இதன்படி தற்போதய தலைவராக திரு.தி.சிவாமகேசன் அவர்களும், செயலாளராக திரு.இ.திருப்புகழூர்சிங்கம் அவர்களும், பொருளாளராக திரு.ந.பாரதி அவர்களும், உப தலைவராக யாழ்ரன் கல்லூரி அதிபர் திரு.வே.முருகமூர்த்தி அவர்களும், உப செயலாளராக திரு.வே.சபாலிங்கம் அவர்களும் கடமையாற்றுவதுடன் பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் திறம்படச் செயற்பட்டு வருகின்றனர்.

**காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள்**

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் இரு குடிநீர்த் தாங்கிகள் (பவுசர்கள்) பெற்று சுண்ணாகத்திலிருந்து குடிநீர் எடுத்து வரப்பட்டு மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகித்தல்.

காரைநகர் சுப்பிரமணிய வீதி விவசாய வாய்க்கால்களை செப்பனிட்டு மதகுகளைப் புனரமைத்தமை. (உதவி - பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்குப் புதிய கட்டடங்கள் அமைத்துக் கொடுத்தமை. (உதவி - சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை)

மாணவர்களுக்குக் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் பெற்றுக்கொடுத்தமை. (உதவி - காரை கலாச்சார மன்றம், அவுஸ்திரேலியா நலன்புரிச் சங்கம்)

காரைநகர் பிரதேச பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்தம் வேதனம் வழங்கல். (உதவி - பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம்)

வருடந்தோறும் கண் நோயாளிகளுக்கு கண் சிகிச்சை (cataract operation) வழங்குதல். (உதவி - பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்)

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் 15க்கும் மேற்பட்ட பயிற்சிப் பரீட்சைகளை நடாத்தல்,உதவிக்கு கரம் கொடுப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நலிவுற்ற காரைமக்களுக்கான மருத்துவ சிகிச்சைக்கான நிதி உதவிகளை வழங்கிவருதல் (உதவி-கனடா கலாசார மன்றம்)

(தொடர்ச்சி நான்காம் பக்கம்)

# காரைநகரின் அபிவிருத்தியில் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் பங்களிப்பு

## கனடா காரை கலாசார மன்றம்

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை பெற்ற காரை மத்தியைச் சேர்ந்த S.வளர்மதிக்கான மருத்துவச் செலவுக் கொடுப்பனவு

தாய்,தந்தையை இழந்த காரைநகர் பெரியமணலைச் சேந்த சிறுவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கல் (ஜனவரி-நவம்பர்)

இருதய சத்திர சிகிச்சைக்காக தோப்புக்காட்டைச் சேர்ந்த கலைப்பிரியனுக்கான கொடுப்பனவு வழங்கியமை.

சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை பெற்ற காரை நகர் மணற்பிட்டியைச் சேர்ந்த சி.பாலகௌரிக்கு நிதி உதவி வழங்கியமை.

2013 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய தரம் 05 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சைகள், பயிற்சி வகுப்புக்களை நடாத்தியமை.

காரைநகரில் இயங்கும் இணக்கசபை தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள் என்பவற்றை இணக்கசபைத் தவிசாளரின் கோரிக்கைக்கமைய மக்களுக்கு விநியோகிக்க அச்சிட்டு வழங்கியமை.

நூலக கட்டடம் அமைப்பதற்காக நிதி உதவி மேற்கொண்டமை.

கண்பார்வை இழந்த ஜங்கரனுக்கான மருத்துவச் செலவுக்கான நிதி உதவியும் சீவனோபாயத்திற்காக நிதி வங்கியில் நிலையான வைப்பிலிட்டு வழங்கியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்தும் சைவ சமய பாடப்பரீட்சை,மணிவாசகர் விழா என்பவற்றுக்கான நிதி உதவி வழங்கியமை

சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பரிசளிப்பு விழாவிற்கான நிதி உதவி

காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கான அலுவலக உபகரண கொள்வனவிற்கான நிதி உதவி

2014 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய தரம் 05 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சைகள்,பயிற்சி வகுப்புக்களை நடாத்தியமை.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கியமை

தோப்புக்காட்டைச் சேர்ந்த மிகவும் வறிய குடும்பம் ஒன்றிற்கான வீட்டுத்திட்டத்திற்கு உதவியமை

தாய்,தந்தையை இழந்த காரைநகர் பெரியமணலைச் சேந்த சிறுவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிப் பணம் தொடர்ந்து வழங்கல்.

காரைநகரைச் சேர்ந்த செல்வராசாவின் மகளின் மருத்துவச் செலவுக்கான நிதி உதவி வழங்கியமை

வேதரடைப்பு முன்பள்ளிக்கு குடிநீர் தாங்கி வழங்கியமை

காரைநகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கற்றல் மற்றும் இணைபாட விதானச் செயற்பாடுகளுக்காக நிதி உதவி வழங்கியமை

காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்திற்காக நிதி உதவி வழங்கியமை

## பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அபிவிருத்திப் பணிக்காக நிதி வழங்கியமை.

இரண்டு கட்டங்களாக கற்றாக் நோயினல் பாதிக்கப்பட்ட 19 பேருக்கு கண்சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொண்டது.

களபூமியில் இயங்கும் யோகா ஆரணியகத்தின் செயற்பாட்டிற்காக நிதி வழங்கியமை.

தியாகராசா மத்திய மகா வித்தியாலய கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த பாடசாலை பழைய மாணவர் சங்கதத்திற்கு நிதி உதவி வழங்கியமை.

தியாகராசா மத்திய மகா வித்தியாலய கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த பாடசாலை பழைய மாணவர் சங்கதத்திற்கு நிலையான வைப்பிற்கான நிதி உதவி வழங்கியமை.

சுந்தரமூர்த்தி ,யாழ்ற்ரன் கல்லூரி அபிவிருத்திக்கான நிதி உதவி.

காரைநகர் அரசினர் வைத்தியசாலை ஆண்கள் விடுதி புனரமைத்து நிலத்திற்கு மாபிள் பதித்து கட்டடம் தீந்தை பூசியமை.

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய திருவாசகப் போட்டிக்காக நிதி வழங்கியமை.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மதில் அமைப்பதற்கான நிதி வழங்கியமை.

காரைநகர் கந்தர் குண்டு,காமாட்சி கேணி புனரமைப்பு.

வியாவில் குளம் புனரமைப்புக்கான கொடுப்பனவு வழங்கியமை.

சுப்பிரமணியம் வீதியில் கால்நடைகள் நீர் அருந்துவதற்கான தண்ணீர்த் தொட்டி அமைத்தமை.

ஆயுள் வேத வைத்திய சாலை நிறுவுவதற்கான காணி களபூமியில் கொள்வனவு செய்து வழங்கியமை.

தொடர்ச்சியான குடிநீர் விநியோகம்.

நூலக கட்டடம் அமைப்பதற்காக நிதி உதவி மேற்கொண்டமை.

காரைநகர் மக்களுக்கான மருத்துவ முகாம் காரைநகர் வைத்தியசாலை, ஊரி அன்ரசன் மண்டபம் ஆகியவற்றில் நடாத்தியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

பத்தர் கேணி,காமாட்சி கேணி புனரமைப்பு.

காரைநகர் வைத்தியசாலை ஆண்,பெண் விடுதிகள் புனரமைப்பு அத்துடன் வைத்தியசாலை செயற்பாட்டிற்காக ரூபா 10 இலட்சம் நிலையான வைப்பில் இடப்பட்டமை

மணிவாசகர் சபை போட்டிக்கான நிதி உதவி

சிவன்கோவிலடி கந்தர் குன்டு புனரமைப்பு.

காரைமத்தி மேம்பாட்டுக் கழகத்திற்கு தளபாடக் கொள்வனவிற்கான நிதி உதவி;

காரைநகர் இந்துக் கல்லூரி புனரமைப்புக்கான நிதி உதவி

காரைநகர் மாணவர் நூலகத்தின் புத்தகக் கொள்வனவிற்கான நிதி உதவி.

சடையாளி வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை திருத்தத்திற்கான நிதி உதவி

கற்றாக் நோயினல் பாதிக்கப்பட்டோருக்கு கண் சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொண்டது.

யாழ்ரன் கல்லூரி கற்றல் செயற்பாட்டிற்கான நிதி உதவி

சுப்பிரமணிய வித்தியாசாலை அபிவிருத்திப் பணிக்கான நிதி உதவி

காரைநகர் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடத்தியமை

களபூமி கலையகத்திற்கான நிதி உதவி

களபூமி ஆரணியகத்திற்கான நிதி உதவி.

கண்பார்வையிழந்த ஒருவருக்கு வாழ்வாதாரத்திற்கான நிதி உதவி

சடையாளிக் கேணி புனரமைப்புக்கான நிதி உதவி

காரைநகரின் அனைத்துப் பிரதேசங்களிலும் 30 இற்கும் மேற்பட்ட கிணறுகள் இறைத்து தூர் வாரி புனரமைத்து வழங்கியமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகர் ஆலடிக் கேணி புனரமைப்பு

காரைநகர் ஆலடிக் கேணி கடந்த 51 வருடங்களின் பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது. தூர்ந்துபோகும் நிலையில் காணப்பட்ட இந்தக் கேணி காரைநகர் பிரதேச செயலர் எடுத்த முயற்சியின் பயனாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

மிகவும் பாழடைந்த நிலையில் மக்கள், கால்நடைகளின் பாவனைக்கு உகந்ததாகக் காணப்படாமல் காடு மண்டிக் கிடந்த இந்தக் கேணி தற்போது மக்களினதும் கால்நடைகளினதும் பாவனைக்கு உகந்தவாறு புனரமைக்கப்பட்டுள்ளது.

சுமார் பன்னிரண்டு இலட்சம் ரூபா செலவில் காரைநகர் பிரதேச செயலக தொழில்நுட்ப அலுவலர்களின் மேற்பார்வையில் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் இந்தக் கேணி முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. நன்நீரைக் கொண்டுள்ள இந்தக் கேணி புனரமைக்கப்பட்டமை தொடர்பாக அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் அந்த சுற்றாடலில் உள்ள கிணறுகளும் படிப்படியாக நன்நீராக மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது





# காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகக் கட்டட இரண்டாம் கட்டப் பணி நிறைவு

காரைநகர் அபிவிருத்திச் சபையின் மாணவர் நூலகக் கட்டடத்தின் முதலாவது மாடியின் இரண்டாவது கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் மாணவர் நூலகம் புதுவீதிச் சந்தியில் அமைக்கப்பட்டு முதலாவது மாடியின் ஒருபகுதி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவர் எஸ்.நடராஜா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக முதலாவது மாடியின் ஒரு பகுதி பூரணப்படுத்தப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந் நூலகத்தினை காரைநகரில் உள்ள பாடசாலை மாணவர்களும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களும் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர். அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான நூல்கள் உள்வாங்கப்பட வேண்டும்.

தொடர்ந்து காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் முதலாவது மாடியின் மற்றொரு பகுதி அமைக்கப்பட்டு முதலாவது மாடியின் கட்டடப் பணிகள் முற்றாக நிறைவுற்றுள்ளது.

தொடர்ந்து நூலகக் கட்டடத்தின் இரண்டாவது மாடியை அமைத்தல், மாணவர்களுக்கான கணணி பயிற்சி நெறியை ஆரம்பித்தல், ஊழியர்களின் மாதாந்த வேதனம் வழங்கல், நிர்வாகச் செலவுகள் போன்றவற்றை மேற்கொள்வதற்காக சபையினால் பல்வேறு அமைப்புகளிடம் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

இந்துகலாச்சார அலுவல்கள் மீள்குடியேற்ற அமைச்சும் இரண்டாவது மாடிக் கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க நிதியுதவியினை வழங்க முன்வந்துள்ளது எனவே மாடிக்கட்டட பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு தொடர்ந்து மாணவர் நூலகம் சிறந்தமுறையில் இயங்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி உதவ முன்வரவேண்டுமென காரைநகர் அபிவிருத்திச் சபையினர் கேட்டுள்ளனர்.

# ஊரியில் குடிநீர்த் தாங்கி

ஊரிப் பிரதேச மக்களுக்கு குடிநீரை சிறந்த முறையில் வழங்கும் நோக்குடன் அப்பகுதியில் இரு குடிநீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. காரைநகர்ப் பிரதேச செயலகம் ஊடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு வழங்கிய நிதியுதவியுடன் இந்த இரு குடிநீர்த் தாங்கிகளும் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் நிறுவப்பட்டுள்ளன.

வரட்சி காலங்களில் அப்பகுதி மக்களுக்கு காரைநகர் பிரதேச செயலகம் ஊடாக இலவச குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த விநியோகத்தை இலகுபடுத்த இந்தக் குடிநீர்த்தாங்கிகள் பேருதவியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஊரி முருகன் ஆலய வளாகத்திலும் ஊரி அண்ணமார் ஆலய வளாகத்திலும் இந்தக் குடிநீர்த் தாங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

## நூலகப் பதிவுகள் சில...













(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பிரான்ஸ் காரைநலன்புரிச் சங்கம்

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனம் வழங்கியமை.

முன்பள்ளிகளில் பால் காய்ச்சுவதற்காக 10 குக்கர்கள் பெற்று வழங்கியமை.

முன்பள்ளி பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிக்கான அனுசரனை வழங்கியமை.

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனம் தொடர்ந்து வழங்கிவருகின்றமை

30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கியமை

முன்பள்ளி பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிக்கான அனுசரனை வழங்கியமை

## சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை

**2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

யாழ்ற்ரன் கல்லூரி,மற்றும் சபையின் செயற்பாட்டிற்காக போட்டோக் கொப்பி இயந்திரம் வழங்கியமை.

தரம் 10 மாணவர்களுக்கான சங்கீத பாட புத்தகம் அச்சிட்டு தீவக வலய மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியமை.

தியாகராசா மத்திய மகா வித்தியாலய 125ஆவது ஆண்டு விழாவிற்கான அனுசரணை வழங்கியது.

பலகாட்டைச் சேர்ந்த பத்மசுலோசனா,தனலட்சுமி ஆகியோரின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்காக மாதாந்தம் 5000 ரூபா வீதம் வழங்கி வருகின்றமை.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கியமை.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :**

பலகாட்டைச் சேர்ந்த பத்மசுலோசனா,தனலட்சுமி ஆகியோரின் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்காக மாதாந்தம் 5000 ரூபா வீதம் தொடர்ந்து வழங்கி வருகின்றமை.

காரைநகர் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி, பிரசவ விடுதி புனரமைத்து வழங்கியமை.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கதிரைகள் அன்பளிப்புச் செய்தமை.

கற்றாக் நோயினல் பாதிக்கப்பட்டோருக்கு கண்சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொண்டது.

## கனடா வாழ் காரை மக்களால் 2013 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

தோப்புக்காட்டைச் சேர்ந்த கலைப்பிரியனுக்கான இருதய சத்திரசிகிச்சைக்காக கொடுப்பனவு வழங்கியமை.

தோப்புக்காடு ஊரி பகுதிகளைச் சேர்ந்த காணிகளற்ற குடும்பங்களுக்கு வீடமைப்பதற்காக பாலாவோடையில் காணி கொள்வனவு செய்து வழங்கியமை.

---

# காரைநகரில் விரைவில் நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம்



காரைநகரில் பொது விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கையில் காரைநகர் பிரதேச செயலகத்துடன் இணைந்து காரைநகர் அபிவிருத்திச் சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த முயற்சிக்கு கனடா காரை கலாசார மன்றம், பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கம், சுவிஸ் காரை அபிவிருத்க்கிச் சபை, பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் என்பன நிதியுதவி வழங்க முன்வந்துள்ளன.

இதன் முதற்கட்டமாக சோலையான் விளையாட்டுக் கழகத்தை அண்டிய பகுதியில் 30 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு காரைநகர் பிரதேச விளையாட்டுப் பேரவைக்காக காரைநகர் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட பரப்பு நிலத்தினை கொள்வனவு செய்து வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் விரைவில் நவீன வசதிகளுடன் கூடிய யாழ் மாவட்டத்தின் முதற்தர பிரதேச விளையாட்டு மைதானம் அமையவுள்ளது.

இந்த மைதானத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சிகள் இடம் பெற்று வருகின்றது.

கடந்த மாதம் நடைபெற்ற பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நவீன வசதிகளுடன் பிரதேச விளையாட்டு மைதானத்தை இங்கு அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

பல மில்லியன் ரூபாசெல்வில் இத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலகத்தினால் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவே விரைவில் நவீன வசதிகளுடன் கூடிய பிரதேச விளையாட்டு மைதானம் எமது பகுதியில் அமைய உள்ளமை உறுதியாகியுள்ளது.

**காரைநகர் அபிவிருத்திச் சபையினால் கொள்வனவு செய்து வழங்கப்பட்ட சோலையான் விளையாட்டு மைதானத்தில் இவ்வாண்டு நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டியின் பதிவுகள்**







# காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயற்ப்பாட்டுப் பதிவுகள் சில...



ஆயுள்வேத வைத்தியசாலைக்கான காணி கையளிப்பு





சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் சங்கீதபாட நூல் வெளியீடு







பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் நிதியுதவியுடன் இடம்பெற்ற விழிவெண்படல சத்திரசிகிச்சையின் போது





வீடமைப்புக்கான உதவி



இருதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு சக்கரநாற்காலி அன்பளிப்பு



விழிப்புலனற்ற ஐங்கரனுக்கு வாழ்வாதார உதவி



களபூமி ஆரணியத்திற்கு நிதி கையளிப்பு





சபையின் அனுசரணையுடனான பிரதேச மட்ட முன்பள்ளி விளையாட்டுப்போட்டியில்



முன்பள்ளிகளுக்கான குக்கர் கையளிப்பு

# கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு தலா பத்து இலட்சம் நிரந்தர வைப்பில்

## அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக



கனடா காரை கலாசார மன்றத்தினால் காரைநகர் ஆரம்பப் பாடசாலைகளுக்கான அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 10 இலட்சம் ரூபா நிதி நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது.

கனடா காரை கலாசார மன்றத்தின் காரைநகர் ஆரம்பப் பாடசாலைகளுக்கான அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிதிய கையளிப்பு நிகழ்வு 5.5.2015 செவ்வாய்க் கிழமை காரைநகர் கோட்ட அலுவலகத்தில் இடம் பெற்றது. காரைநகர் பாடசாலை அதிபர்கள்,ஓய்வு பெற்ற அதிபர்கள்,தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்,காரைநகர் அபிவிருத்திச் சபையினர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்;

காரைநகர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்; இந்நிகழ்வில் உரையாற்றுகையில்

கல்வி வரலாற்றில் முக்கியமான நாளான இன்றைய நாள் காரைநகரின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள்களில் ஒன்று கனடா காரை கலாசார மன்றமானது காரைநகர் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை நடாத்துவது உட்பட பல்வேறு அத்தியாவசிய கற்றல் தேவைகளுக்கான உதவிகளைத் தாராளமாக வழங்கி காரைநகர் பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உறுதுணையாக நிற்கின்றனர் அவர்களது கல்விச் சேவையினை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருந்துவிட முடியாது. அவர்களுக்கு எனது சார்பாகவும் பாடசாலை அதிபர்கள் சார்பாகவும் முதற்கண் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அவர்கள் செய்துள்ள மகத்தான கைங்கரியத்தினை பாடசாலை அதிபர்கள் சரியான முறையில் பயன்படுத்தி உச்சப்பயனைப்பெறவேண்டும்.இதுவே நாம் அவர்களுக்குச் செய்கின்ற கைம்மாறாகும்.

இங்கு உரையாற்றிய வேரப்பிட்டி ஸ்ரீ கனேசா வித்தியாலய அதிபர் திரு இளங்கோ அவர்கள் தனது உரையில் கனடா காரை கலாசார மன்றத்தின் சாதனை என்றே இதனைச் சொல்லவேண்டும் இவ்வாறான ஒரு காரியத்தினை செய்வது என்பது இமாலய சாதனையாகும்.

தொண்டு நிறுவனங்கள் நிதி சேகரிக்கும் முறையை நான் அறிந்திருக்கின்றேன் அவர்கள் ஒரு ரூபா இரண்டு ரூபாவாக உண்டியல் கிலுக்கி மிகமிகக் கடினப்பட்டே பணத்தினைச் சேகரிக்கின்றார்கள் அவ்வாறு சேகரிக்கப்படும் பணம்தான் உங்களுக்கு வழங்கப்படுகின்றது அதனை மிகச் சிறந்த முறையில் மிகப் பயனுள்ள முறையில் செலவு செய்தல் வேண்டும்.

கனடா கலாசார மன்றத்தினால் எமது பாடசாலைக்கு செய்ய வேண்டிய உதவி என்ன என கடந்த வருடம் கேட்டார்கள் எமது பாடசாலைக்குத் தேவையான உதவியினைக் கேட்டிருந்தேன் அவர்கள் உடனடியாகவே அந்த உதவியினை காரைநகர் அபிவிருத்திச் சபையூடாக நிறைவேற்றித் தந்தார்கள். அப்போது எண்ணினேன் கூடிய உதவிகளைக் கேட்டிருக்கலாம் என்று. பின்னர் ஏனைய பாடசாலைகளுக்கும் நான் நினைத்தது போன்றே கூடிய உதவிகளை வழங்கியிருந்ததை அறிந்தேன். இவ்வாறு காரைநகர் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றுகின்ற பணி பாராட்டுக்குரியது என்றார்.

தொடர்ந்து காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் உரையாற்றுகையில் இன்றைய நாளினை எனது வாழ்க்கையிலும் மிக முக்கியமான நாளாகவே கருதுகின்றேன்.இந்த மகத்தான சேவையை இன்றைய நாளில் மேற்கொள்ள உதவிய அந்த இறைவனுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

கனடா காரை கலாசார மன்றத்தின் கல்விப்பணி நீங்கள் அறியாத ஒன்றல்ல கடந்த வருடமும் காரைநகர் பாடசாலைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 40 இலட்சம் ரூபா வரை வழங்கி உள்ளார்கள். இன்று காரைநகரில் உள்ள 12 ஆரம்பப் பாடசாலைகளில் 10 பாடசாலைகளுக்கு தலா பத்து இலட்சம் ரூபா வீதம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பிலிட்டு அதன் வட்டிப் பணத்தினை ஆறு மாதங்களுக்கு ஒரு தடைவ உங்கள் உங்கள் பாடசாலைகளின் அபிவிருத்திக் கணக்கில் வைப்பிலிடப்படும். அதன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 5ம் திகதியும்,மே 5ம் திகதியும் வட்டிப்பணம் பாடசாலை அபிவிருத்திக் கணக்குகளில் தேசிய சேமிப்பு வங்கியினால் வைப்பிலிடப்படும்.அந்தப் பணத்தினை அதிபர்களாகிய நீங்கள் பாடசாலையின் கற்றல் செயற்பாட்டிற்காக ஏற்கனவே தீர்மானித்த திட்டங்களுக்குச் செலவு செய்ய முடியும்.

வியாவில் சைவ வித்தியாலயத்திற்கு கனடாவில் வதியும் அந்தப் பாடசாலைப் பழைய மாணவர் ஒருவர் பத்து இலட்சம் ரூபாவினையும் வழங்க முன்வந்துள்ளார்.அவருடைய பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டதும் ஒரு சில நாள்களில் வழங்க முடியும்.அதே போன்று பாலாவோடை இந்துத் தமிழ் கலவன் பாடசாலைக்கான நிதி கனடா காரை கலாசார மன்றத்தினால் கொழும்பு வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ளது அந்த பணம் அடுத்த மாதம் 12ம் திகதி முதிர்வடைந்ததும் எமது வங்கிக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் அன்றைய தினமே பாலாவோடை இ.த.க.பாடசாலைக்கான நிலையான வைப்பினை மேற்கொண்டு வழங்குவதற்கும் கனடா காரை கலாசார மன்றத்தினால் எமக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது. எனவே அந்தத் திட்டமும் அடுத்த மாதத்திற்குள் நிறைவேற்றப்படும் எனத் தெரிவித்ததுடன் கனடா காரை கலாசார மன்றத்திற்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

தொடர்ந்து செயலாளர் இ.திருப்புகழூர்சிங்கம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.












## காரைநகர் அபிவிருத்திச் சபை

### நிர்வாக சபை 2013 - 2014

போஷகர் : திரு.ப.விக்கினேஸ்வரன்
தலைவர் : திரு.சிவா தி. மகேசன்
உபதலைவர் : திரு. வே.முருகமூர்த்தி
செயலாளர் : திரு.இ.திருப்புகழூர்சிங்கம்
உபசெயலாளர் : திரு.வே. சபாலிங்கம்
பொருளாளர் : திரு.ந.பாரதி

**நிர்வாக உறுப்பினர்கள்**

Dr.சு.நடராசா
திரு.க.நேத்திரானந்தன்
திரு.நா.பாலகிருஷ்ணன்
திரு.இ.சண்முகராசா
திரு.இ.ஜெயராமன்
திரு.வி.வைக்குந்தவாசன்
திரு.கை.நாகராஜா
திரு.யோ. கேதீஸ்வரன்
திரு.தெ.சோமசுந்தரக்குருக்கள்

### காரைநகர் அபிவிருத்திச் சபை (மாணவர்) நூலகம்

**நிர்வாகக் குழு**

பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை (தலைவர்)
திரு.வே.முருகமூர்த்தி (செயலாளர்)
திரு.அ.மனோகரன் (ஆலோசகர்)
செல்வி விமலா விஸ்வநாதன் (குழு உறுப்பினர்)
திரு.க.நேத்திரானந்தன் (குழு உறுப்பினர்)
திருமதி வீரமங்கை யோகரத்தினம் (குழு உறுப்பினர்)

**சபை பணியாளர்கள்**

1. பகுலசிங்கம் (குடிநீர் விநியோக பணியாளர்)
2. விகலிகரன் (குடிநீர் விநியோக பணியாளர்)
3. இசுதன் (குடிநீர் விநியோக பணியாளர்)
4. பே.கணேசன் (குடிநீர் விநியோக பணியாளர்)
5. க.சண்முகநாதன் (குடிநீர் விநியோக பணியாளர்)
6. ஜெதுசிகரன் (குடிநீர் விநியோக பணியாளர்)
7. ஆ.பிரசாந்தினி (அலுவலகப் பணியாளர்)
8. செ.அனுசியா (நூலகப் பணியாளர்)
9. சி.சோபிகா (நூலகப் பணியாளர்)
10. பே.சுகிர்தா (நூலகப் பணியாளர்)

**நிர்வாக சபை 2013/2014**



# காரைநகரில் நீர்வளப் பாதுகாப்பு

காரைநகர் பிரதேசம் மக்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் சிறந்த நீர் வளமும், நல்ல விளை நிலமும் கொண்ட செழிப்பான பூமியாகக் காணப்பட்டது. இங்கு வாழ்ந்து வந்த நாற்பாதியிரம் மக்களும் பயன்படுத்திய நன்னீர் வளம் உள்ளூரிலே சுயதேவைப் பூர்த்தி நிறைந்ததாக இருந்தது. ஆனால் இன்று மிகக் குறைந்தளவு எண்ணிக்கையான மக்கள் வசிக்கின்ற நிலையில் வெளியில் இருந்து தண்ணீர் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது நன்னீர்த் தேவைகளுக்கு வெளியில் தங்கியிராது எமது கிராமத்தில் அதனுடைய உச்சப் பயனைப் பெற வேண்டும். இன்றைக்கு குடாநாட்டில் உள்ள நன்னீர் நைதரசன் செறிவு, மலக்கழிவு தொற்று நோய்க் கிருமி, நிலத்தடி நீர் குறைவடைதல் போன்ற பல்வேறு வழிகளில் மாசடைகின்றது.

எமது ஊரில் உள்ள நன்னீர் வளங்கள் வடபகுதியில் தான் கூடுதலாக இருந்தது. ஆனால் இன்று அதுவும் கேள்விக்குறியாக அமைந்து விட்டது. ஏனெனில் நீர் விநியோகத்திட்டத்தாலும், இராணுவத்தினர் தமது தேவைகளுக்காக நீரைப் பெற்றுக்கொள்வதாலும், பழைமையான கேணிகள், வெங்காயக் குண்டுகள் தூர்ந்து போய் உள்ளதாலும், நிலத்தடி நீரை கூடிய கனவுள்ள பைப்புகள் பாவித்து வீடுகளில் மின் மோட்டர்கள் மூலம் பெறுவதாலும் எமது ஊரில் உள்ள நன்னீர் வளம் பாதிக்கப்படுகிறது. தற்போது எஞ்சியிருப்பது கோவளப் பகுதியில் உள்ள நன்னீர் படுக்கையில் உள்ள நன்னீர்க் கிணறுகள். ஏனென்றால் அங்கு மின் மோட்டர்களும் நீர் விநியோகமும் இல்லை. இப்படியாக மழை நீரைத் தேக்கி வைக்கக் கூடிய கேணிகள் நீர்த் தேக்கங்கள் புனரமைக்கப்பட்டு வெளியில் செல்லும் மழை நீரை தேக்கி வைத்தால், அவற்றின் சுற்றாடலில் உள்ள கிணறுகள் இயற்கையாகவே மண் மூலம் சுத்திகரிக்கப்பட்டு நன்னீர் கிணறுகளாக மாறும்.

தற்சமயம் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்படும் பகுதி கிழக்குப் பகுதியாகும் அங்கு போதிய ளவு கேணிகளும் கிணறுகளும் (புனரமைக்கப் படாமலும்) உள்ளன. ஆனால் நிலத்தடி நன்னீர்ப் படுக்கைகள் பற்றாக் குறையாக உள்ளன. துறைசார் வல்லுனர்களின் உதவியுடன் இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து இதனை நிவர்த்தி செய்வதற்கு அங்குள்ள பொது அமைப்புக்கள் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து உடனடியாக செயற்பட வேண்டும்.

எமது ஊரில் ஏனைய இடங்களில் உள்ள கேணிகளும் நீர்த் தேக்கங்களும் புனரமைக்கப்பட வேண்டும். "வங்கியில் பணத்தை வைப்புச் செய்தால் தான் மீளப் பெற முடியும்" என்பது போல நிலத்தடி நீரைத் தேக்கினால் தான் நன்னீரை பெற்றுக்கொள்ள முடியும். நிலத்தடி நீர் பாதுகாக்கப்படா விடின் நிலத்தின் அடியில் உள்ள பவளப் பாறைகளில் வெற்றிடம் உருவாகி நில நடுக்கம் ஏற்பட வாய்ப்புண்டு.

அத்துடன் நன்னீராயினும், உவர் நீராயினும் கிணறுகள் புனரமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாக ஒரு துளி உவர் நீர் கூட இல்லாமல் இருந்தது. ஆனால் அயலில் உள்ள பொதுக்கிணறுகள் புனரமைக்கப்படாமல் இருந்ததால் அவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி உள்ளார்கள்.

பூமி வெப்பம் அடைவதாலும், நீர் வறட்சி ஏற்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு கூடுதலாக நிழல் மரங்கள் நாட்டப்பட வேண்டும். சில வளவுகள், காணிகள் துப்புரவு செய்யும் போது பாரம்பரியமான ஆயுதங்களான கத்தி, மண்வெட்டி போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். இதனால் இயற்கைச் சூழலில் உள்ள பனை வடலிகள், ஈச்சம்பழ மரங்கள், கொய்யா மரங்கள் போன்றவை பாதுகாக்கப்படும். அத்துடன் நிழல் மரங்களும் பாதுகாக்கப்படும். இயந்திரத்தின் மூலம் காணிகள் துப்புரவு செய்வதால் அந்த நிலம் முழுவதும் பொட்டல் வெளிகளாக மாறி நிலம் வெப்பம் அடைகிறது. அத்துடன் கட்டடங்கள் அமைக்கும் போது இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும். ஏனென்றால் மழை நீர் தேங்கி நிற்கும் இடம் மேடாக்கப்படுகிறது. மரங்கள் அழிக்கப்படுகிறது.

அத்துடன் அறிவியல் ரீதியாகவும் சிந்திக்கவேண்டிய கால கட்டத்தில் உள்ளோம். இன்று பூமியில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகிறது. நில நடுக்கம், கடல்கொந்தளிப்பு, புயல், மழை, வரட்சி அதன் அடிப்படையில் எங்கள் கிராமத்தில் கடற்கரையோரப் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. ஏறக்குறைய 50 ஆண்டுகளில் கடல் அரிப்பு ஏற்பட்டு கடல் உள்வாங்கப்பட்டுள்ளது. பூமியில் ஏற்பட்ட வெப்பம் காரணமாக பனிச் சிகரங்களில் உள்ள பனிக்கட்டி உருகி கடலில் நீர் மட்டம் உயர்வடைகிறது. வடகிழக்குப் பக்கமாக இருந்த தூம்பில்பிட்டி (பெரிய தனிப்பனை இருந்த இடம்) இன்று அழிவடைந்து உள்ளது. வடகிழக்கு மூலை தற்போது மிகவும்பாதுகாப்பற்ற இடமாகக் காணப்படுகிறது.

வடக்குப் பக்கமாக உள்ள பனைகள், சவுக்கு மரங்கள் அழிக்கப்படுகின்றன. உடனடியாக கரையோரமாக மரங்கள் நடப்பட்டு கரையோரப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். கடலில் ஏற்படும் பாரிய அலைகள் கரையைத் தாக்காதவாறு பெரிய கற்கள் கரையோரத்தை அண்டிய கடற் பகுதியில் போடப்பட்டு அலைகளின் தாக்கம் குறைக்கப்பட வேண்டும்.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதை தவிர்ப்பது, நன்னீர்த் தேக்கங்களைப் பராமரிப்பது, கடல் அரிப்பைத் தடுப்பது, நிழல் மரங்கள் நாட்டுவது தொடர்பாக இளைய தலைமுறையினரிடையே குறிப்பாக பாடசாலை மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஆசிரியர்களும் சமூக ஆர்வலர்களும் முன்வர வேண்டும். துறைசார் நிபுணர்கள் மூலம் நீர்வள பாதுகாப்பு, மற்றும் கடல் அரிப்பை தடுப்பது தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் செயற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

## மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைப்பு

காரைநகர் பிரதேசச செயலகத்தின் ஊடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி உதவியுடன் ஐந்து இடங்களில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக் கப்பட்டுள்ளன.

மாணவர் நூலகம், கலாசார மத்திய நிலையம், தபாலகம், பிரதேச செயலகம், பஸ் டிப்போ ஆகிய ஐந்து இடங்களில் இந்த மழைநீர் சேகரிப்புத் தொட் டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளில் சேகரிக் கப்படும் நீர் கோடைகாலங்களில் பயன்படுத்துவ தன் ஊடாக தண்ணீர்த் தட்டுப்பாட்டை ஓரளவு குறைக் கலாம்.







கனடா காரை கலாச்சார மன்றத்தினால் யாழ்ற்ரன் கல்லூரிக்கு வழங்கப்பட்ட கணணிகளை மன்றத் தின் தலைவர் செயலாளர் நேரில் சென்று பார் வையிட்டனர்.

## பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் நிதியுதவியுடன் காரைநகர் அரசினர் வைத்தியசாலை ஆண்கள் விடுதி மற்றும் பெண்கள் விடுதி புனரமைப்பு









## பத்து வறிய குடும்பங்கள் வீடமைப்பதற்கு காணி அன்பளிப்பு

காரைநகர் பாலாவோடை பகுதியில் வீடுகளற்ற பத் துக் குடும்பங்களுக்கு கனடா வாழ் மக்களின் நிதியுத வியுடன் காணி கொள்வனவு செய்யப்பட்டு மக்களுக் குக் கையளிக்கப்பட்டுள்ளது.இந்தக் காணியில் அரச வீட்டுத்திட்டத்தின் ஊடாக வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது.













கனடா காரை கலாசார மன்றத்தினால் வருடந்தோறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களுக்கு மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளையும் கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றது.கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கருத்தரங்கில் யாழ் பிரபல ஆசிரியர் வே.அன்பழகன் வளவாளராகக் கலந்துகொண்டு மாணவர்களுக் கான பயிற்சிகளை வழங்கினார்.



கனடா காரை கலாசார மன்றத்தின் நிதி அனுசரணையுடன் காரைநகர் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு அறுபதபயி ரம் ரூபா பெறுமதியான மாநாட்டு மேசை வழங்கப்பட்டது

# காரைநகர் மக்களுக்கு கலங்கரை விளக்காக மாணவர் நூலகம்

2013 ஆம் ஆண்டு விஜய தசமியின் போது ஆரம்பிக்கப்பட்ட மாணவர் நூலகம் சிறந்த முறையில் இயங்கி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

நாடு அல்லது ஊர் பெருமை பெற வேண்டுமாயின் அவ்வூரில் வாழும் மக்கள் பண்பும் ஒழுக்க சீலராகவும் வாழ வேண்டும் பண்பும் ஒழுக்கமும் உயர்வடைய வேண்டுமாயின் கல்வி நலம் அவசியமாகும். கல்லூரி பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் கற்பதனால் பூரண அறிவைப் பெற முடியாது. பரந்த அறிவைப்பெற நூல் நிலையமும் ஒன்றாக விளங்குகின்றது.

கப்பல்கள் திசை மாறிச் செல்லாது நேரிய வழியில் செல்ல கலங்கரை விளக்கம் வழி காட்டியாக அமைவது போல மக்கள் நல்வாழ்வு வாழ நூலகங்கள் அறிவாலயமாக விளங்குகின்றது. "நூல் பல கல்", "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்றார் ஔவையார். வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது" என்றும் "கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்பதும் ஆன்றோர் வாக்கு.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

என்றார் வள்ளுவப்பெருமான். எனவே நூலகங்கள் ஊருக்கு அவசியமான தொன்றாகும்.

வைத்தியத் தொழில்புரிந்த சுப்பிரமணியம் நடராசா அவர்களின் உள்ளத்தில் பரிணமித்த மாணவர் நூலகம் படிப்படியாக செயல் உருப்பெற்று நூலகமாக எழுந்த பெருமை அவரைச் சார்ந்ததாகும். தாம் அமைத்த நூலகத்தை காரைநகர் அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைத்துள்ளார். பொறுப்பை ஏற்ற அபிவிருத்திச் சபையினர் நூலகம் சிறப்புற இயங்க பல தனியார் நிறுவனங்கள், தனிப்பட்ட மக்கள் அனைவரிடமிருந்தும் நூலகத்திற்கு அலுமாரிகள், புத்தக அடுக்குகள், மேசைகள், கதிரைகள் போன்றவற்றைப் பெற்று சிறப்புமிக்க நூலகமாக விளங்க வைத்துள்ளனர். மேலும் தற்போது உள்ள கட்டடத்தின் கீழ் பகுதியில் அரைப் பங்கு வேலையைத் துரிதமாகச் செய்து முடித்துள்ளனர். மேல் மாடிக் கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் அரைப் பங்கு வேலையைத் துரிதமாகச் செய்து முடித்துள்ளனர். மேல் மாடிக் கட்டடம் தொடராத நிலையில் உள்ளது. இதனை எதிர்வரும் அபிவிருத்திச் சபையினர் மேற்கொள்ள முனைய வேண்டும். அவ்வாறாயின் பூரணமான நூலகக் கட்டடமாக விளங்கும்.

இந்த நூல் நிலையம் பிரதான வீதியான மேற்கு வீதியில் சிவன்கோயில் வீதிச் சந்திக்கு அருகில் அமைந்திருக்கும் இடம் மிகப் பொருத்தமான இடமாகும். மக்கள் செறிந்து வாழும் பகுதியில் இரு பெரிய கல்லூரிகளுக்கு மத்தியில் தனியார் கல்வி நிலையங்கள் சூழ உள்ள பகுதியில் காற்றோட்டம், சூரிய ஒளி, மின் ஒளி நிறைந்த கட்டடத்தில் அமைந்துள்ளதால் நூலகத்தை நல்ல முறையில் பயன்படுத்த வசதிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

நூலகத்திற்கு வருகை தந்த நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கும், புத்தகங்களை இரவல் பெற்று படிப்பதற்குமான செயற்பாடுகளை செய்து வருகின்றது.

கடந்த ஆண்டு (2014) 5662 பயனாளிகள் வாசிக்கும் செயற்பாட்டிலும் 6122 பயனாளிகள் இரவல் நூல் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

இந்த நூலகத்தில் 295 மாணவர்களும் 85 ஏனையோர்களுமாக மொத்தமாக 380 பேர் அங்கத்தவராக உள்ளனர்.

இதுவரை 10264 நூல்களும் 310 சஞ்சிகைகளும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நூல்கள் ஏராளம், ஏராளம். பயிற்சி நூலின் வாழ்நாள் குறைவு என்பதால் அதனை நாம் கணக்கில் எடுப்பதில்லை.

இந்த நூலகத்தில் முன்பள்ளி மாணவர்களுக்கான நூல்கள், பாடசாலை மாணவர்களுக்கான (தரம் 1 - 13 வரை) பாட நூல்கள் பயிற்சி நூல்கள், பொது அறிவு நூல்கள், நாடக நூல்கள், கவிதை நூல்கள், தமிழ் இலக்கிய நூல்கள், சமய இலக்கிய நூல்கள், மருத்துவ நூல்கள் கணக்காளர் நூல்கள், உளவியல் நூல்கள், சோதிட நூல்கள், யோகாசன பயிற்சி நூல்கள், மனையியல் நூல்கள், ஆங்கில மொழியிலான இலக்கண இலக்கிய, கதை, பயிற்சி நூல்கள், சிங்கள மொழியிலான பயிற்சிப் புத்தகங்கள் நூல்கள், ஆங்கில, தமிழ் அகராதிகள், கலைக்களஞ்சிய நூல்கள் பல வகையான சஞ்சிகைகள் என்பன நூலகத்தை வளம்படுத்துகின்றன.


இவ்வாறு நூல்களை அன்பளிப்புச் செய்த அனைவருக்கும் நூல் நிலையம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்றும் குறைந்த வேதனத்துடன் வேலை செய்யும் நூலகர்களுக்கான சம்பளத்தை அதிகரித்து அவர்களை தொடர்ந்தும் இவ் வேலையில் நியமிக்க வேண்டும்.

பூரணமான நூலகமாக, ஊருக்கு அறிவு ஒளி பரப்பும் நூலகமாக விளங்க வேண்டுமாயின் பல தேவைகளை நூலகம் வேண்டி நின்கின்றது. முதலில் நூலகத்திற்கென ஒரு யாப்பு அமைக்கப்பட்டு அபிவிருத்தி சபையின் கீழ் தனித்து இயங்க வேண்டும். (நூலகத்திற்கு நூலகப்பட்டம் பெற்றவர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும். அவரின் கீழ் தற்போது இயங்கி வரும் பிள்ளைகள் மூவரும் துணை நூலகராக நியமிக்கப்பட வேண்டும்) நவீன கற்றல் தொடர்பாக கணினிகள் இன்றியமையாதது. நூலக நிர்வாக செயற்பாட்டுக்கான கணினி, தொலைபேசி, போட்டே பிரதி எடுக்கும் இயந்திரம் போன்றன அத்தியாவசியமானதாகும். மேலும் மேல் மாடிக் கட்டடமும் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். இவைகள் யாவும் பூர்த்தியடையும்போது நிறைவான நூலகமாக அறிவு ஒளி ஊட்டும் நூலகமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலகத்தின் வளர்ச்சிக்காக பெருந்தொகையான நூல்களை அன்பளிப்புச் செய்தவர்கள் சுப்பிரமணியம் நடராசா, சிவா. மகேசன், நடராசா தயாபரன், காரை நலன்புரிச்சங்கம், அவுஸ்திரேலியா காரை கலாசார மன்றம், கோமளா சச்சிதானந்தன் ஊடாகவும் மற்றும் தயானந்தன் ஊடாகவும், சுவிஸ் காரை அபிவிருத்திச் சபை, பிரான்ஸ் காரை நலன் புரிச் சங்கம், கனடா காரை கலாசார மன்றம், அம்பிகை புத்தக நிலையம் (யாழ்ப்பாணம்), ஐ.தி. சம்பந்தன் (கொழும்பு), ஜெயா புத்தக நிலையம் (கொழும்பு), க.பாலச்சந்திரன் (கோவளம்), பா.சோதிநாதன் (புதுறோட்), சி.கந்தையா போன்றவர்கள் பெருந்தொகையான நூல்களையும் ஏனைய தனிப்பட்டவர்கள் தம்மால் இயன்ற நூல்களையும் வழங்கினார்கள்.

**பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை**
(ஓய்வுநிலை அதிபர்)
மாணவர் நூலக முதல்வர்



# கண்ணீர் அஞ்சலி

**சிவத்தமிழ் வித்தகர் மூதறிஞர் பண்டிதமணி**
**கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள்**

என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அப்பரடிகளின் வாக்கிற்கிணங்க தம் வாழ்நாள் முழுவதும் சைவப்பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றிய பெருமகனார் இறையடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு பெரிதும் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவு தமிழ் உலகிற்கும், சைவ மக்களுக்கும், பெரிதும் காரை வாழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

நூற்றாண்டு விழாவைக் காண இன்னும் சில மாதங்கள் இருக்கும் வேளையில் சிதம்பரேஸ்வரப் பெருமானின் திருவடிகளை அடைந்த அன்னாரது ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**காரைநகர் அபிவிருத்திச் சபை,**
**காரைநகர்.**

# காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயற்ப்பாட்டுப் பதிவுகள் சில...



பிரித்தானிய காரை நலன்புரிச் சங்க நிதியுதவியுடன் நீர்நிலைகள் புனரமைப்பு



குடிதண்ணீர் விநியோகத்தின் போது...

இச் செய்திமடல் காரைநகர் அபிவிருத்தச் சபையினால் 2015 மே மாதம் ஓர் அன்பரின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது

தேவி Printers, Jaffna 021 300 3030